# மெட்ரோ ரயிலில் பாரம்பரிய இசை நிகழ்ச்சி

வண்ணாரப்பேட்டை, ஜன. 25–

தமிழ் கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தை கொண்டாடும் வகையில், மெட்ரோ ரயில் நிலையங்களில், பாரம்பரிய இசை நிகழ்ச்சிகள் நடந்தன.

சென்னை விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

தமிழ் கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தை கொண்டாடும் வகையில், சென்னையில் உள்ள இசை கலைஞர்கள் இணைந்து, தமிழ் கலாசாரத்தின் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகளை வழங்கி வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக, சென்னை விமான நிலைய மெட்ரோ ரயில் நிலையத்தில், பாரம்பரிய இசை நிகழ்ச்சி நேற்று நடந்தது.

தமிழ் ராக் பேண்ட் குழுவினரின் நடன நிகழ்ச்சியும், பரத் நாராயண் குழுவினரின் கர்நாடக இசை கச்சேரியும் நடந்தது.

வண்ணாரப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையத்தில், 'தேவராட்டம், தப்பாட்டம், ஒயிலாட்டம்' நிகழ்ச்சிகள் நடந்தன.

பொதுமக்கள், மெட்ரோ ரயில் பயணியர் பார்த்து ரசித்தனர்.



■ தமிழ் கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தை கொண்டாடும் வகையில், மெட்ரோ ரயில்களில், பாரம்பரிய இசை நிகழ்ச்சிகள் நடந்தன.